**2026 ஏப்ரல் மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**S.C. நெம்பர் : 19/2024**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 19/2024 | பெயர்: முத்துப்பாண்டி<br>த/பெ.மாரிமுத்து | PW2 | 29.04.2026 |

**சாட்சி M.P.28/2026 மனு 08.04.2026 ம் தேதி அனுமதிக்கப்பட்டதின்பேரில் அழைக்கப்பட்டு 1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. எனது முதல் விசாரணையில் 04.11.2013 ம் தேதியன்று வைஷ்ணவி மருந்து கடையில் ஆய்வு செய்யப்பட்டதாக கூறி அதன் சம்பந்தமாக செயல்முறை குறிப்புகள் துறைரீதியாக எனக்கு வழங்கப்பட்டதா என்றால் தொலைபேசி மூலம் அழைப்பு விடுக்கப்பட்டது. நாட்குறிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கடைக்கு சென்றபோது ஆய்வு அதிகாரிகள் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் 7 வகையான மருந்துகள் படிவம் 16 மூலம் கைப்பற்றப்படவில்லை என்றாலும் புகார்தாரரும், அலுவலர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

2. 7 வகையான மருந்துகள் என்னென்ன எண்ணிக்கையில் இருந்தன என்று முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. சோதனைக்கு சாட்சியாக புகார்தாரரையோ, வேறு உயர் அதிகாரிகளையோ அழைத்தேனா என்றால் கிராம உதவியாளரை அழைத்துச் சென்றேன். நான் உண்மையில் ஆய்விற்கு சென்றிருந்தால் உண்மை விபரங்களை பதிவு செய்திருப்பேன் என்றாலும், ஆய்விற்கு செல்லாததால்

அவ்வாறு செய்யவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 29.04.2026 ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.04.29 18:15:29 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
29.04.2026